# இன்றைய சமுதாய அபிவிருத்தியில் தொழில்நுட்பக் கல்வியும் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல்களினதும் முக்கியத்துவம்

பொது நூலகம்
தெற்கு சுன்னாகம்

யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை

கந்தரோடை சுன்னாகம்.

## நிறுவுநர் அம்பலவாணர் கந்தையா

# நினைவுப் பேருரை

யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை
கந்தரோடை சுன்னாகம்.

**14.09.2008**

**குமாரகுருநாதன் சாந்தகுமார்,**
இணை முதல்வர் / வர்த்தக பீடத் தலைவர்,
தொழில்நுட்பவியல் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

# "SIGNIFICANCE OF TECHNICAL EDUCATION, CAREER GUIDANCE & COUNSELLING IN THE PRESENT DAY SOCIETY"

யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை

கந்தரோடை, சுன்னாகம்.


பொது நூலகம்
வலி. தெற்கு சுன்னாகம்

| | |
|---|---|
| வரவுப் பதிவு எண் | |
| வகுப்பு எண் | |


# AMBALAVANAR KANDIAH

# Founder's Memorial Lecture

**J/KANTHARODAI TAMIL KANDIAH VIDYASALAI**


***Mr.Kumaragurunathan Shanthakumar,***

***Deputy Director / Head of Commerce,***
***College of Technology/ Technical College.***
***Jaffna.***


**14.09.2008**

## உள்ளடக்கம் பக்கம்

1. கல்லூரி ஸ்தாபகர் அமரர் கந்தையா அவர்கள் பற்றிய சில பசுமையான நினைவு சுவடுகள் *1*

2. கல்வி செயற்பாடுகள் தொடர்பில் இன்றைய நிலைமை *3*

3. தொழில் என்பது யாது? *4*

4. ஒவ்வொருக்கும் தொழில் தேவைதானா? *5*

5. தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல்களின் அவசியம் *7*

6. வெற்றிகரமான தொழில் ஒன்றினைத் தேடலுக்கான உபாயங்கள் *9*

7. தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சியின் முக்கியத்துவம் *12*

8. தொழில் பயிற்சியினை வழங்கும் அமைப்புக்கள் *13*

9. யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்வியின் கற்கை நெறிகள் *15*

10. யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனக் கற்கைகள் *20*

11. இலங்கை தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் கற்கைகள் *21*

12. யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரியின் புதியபரிமானம் [NVQ] *21*

# அமரர்

# அ.கந்தையா உபாத்தியாயர்



**தோற்றம்**

***1869.06.16***

*(சுக்கில வருடம் ஆனி உத்தர நட்சத்திரம்)*

**மறைவு**

***03.08.1951***

*(கரவருடம் ஆடி மாதம் பூர்வபக்க பிரதம திதி)*

# கல்லூரி ஸ்தாபகர் அமரர் கந்தையா அவர்கள் பற்றிய சில பசுமையான நினைவுச் சுவடுகள்

என்றென்றும் வரலாற்று நாயகனாக போற்றப்படும் அமரர் கந்தையா அவர்களின் நிறுவுநர் தினம் மற்றும் பரிசளிப்பு விழா என்பதனை சிறப்பாக தலைமைதாங்கி நடாத்தும் மதிப்புகுரிய கல்லூரி அதிபர் செல்வக்குமரன் அவர்களே! இன்றைய நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்து வரும் சிறிலங்கா ரெலிரெலிக்கொம் பிராந்திய முகாமையாளரும், எந்திரியுமான சிவானந்தன் மற்றும் அவர்தம் பாரியார் அவர்களே, கௌரவ விருந்தினரே, ஆசிரிய பெருந்தகைகளே, அன்பான மாணவ மணிகளே, அறிஞர் பெருமக்களே, நண்பர்களே உங்கள் அனைவருக்கும் எனது வணக்கங்கள்.

இந்து சமுத்திரத்தின் முத்து போன்று விளங்கும் ஈழத்தின் சிரசு போன்று கருதப்படும் யாழ் குடாவில் தொல்லியல் சான்றுகளை தன்னகத்தே கொண்டு வரலாற்றுப் பழமையும் பெருமையும் மிக்கது கந்தரோடை நகராகும். இந்த வளம் பொருந்திய நகருக்கு மேலும் புகழினையும் மதிப்பினையும் அளித்த பெரும் கல்விப் புலமையாளரும், ஆன்மீக வாதியும் சமூக சேவையாளருமான அமரர் அம்பலவாணர் கந்தையா அவர்களை நினைவு கூர்ந்து, அவர் பெயரில் நினைவு பேருரை ஆற்ற சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மிக மகிழ்ச்சி அடைகின்றேன். இதற்கு காரணமாக இருந்த அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவசங்க மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க நிர்வாகிகள் அனைவருக்கும் முதற்கண் நன்றி கூற கடமைப் பட்டுள்ளேன்.

வரலாற்றுபுகழ் பூத்த கந்தரோடை நகரில் சைவத்தையும் தமிழையும் தமது இரு கண்களாகப் பேணி வாழ்ந்து வந்த திரு.சி. அம்பலவாணர் அவர்களுக்கும், சிதம்பர அம்மையாருக்கும் 1869 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 16ஆம் நாள் அருந்தவபுதல்வனாக உதித்தவர் தான் கந்தையா உபாத்தியாயர் அவர்கள். பொய்யா மொழி புலவர் வள்ளுவப் பெருந்தகை திருக்குறளில் கூறியதற் கிணங்க,

"அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

அமரர் கந்தையா அவர்களை என்று போல் இன்றும் நினைவு கூர்ந்து போற்றுகின்றோம். கந்தரோடை எனும் புனித பூமி மீதும், அவர் தம் மக்கள் மீதும், தமிழ் மீதும் கொண்ட வற்றாத பற்றினால் 1893 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் நாள் தனது சொந்தக்காணியில் கந்தரோடை சைவதமிழ் வித்தியாசாலை ஒன்றை நிறுவினார். இன்று பெரு விருஷ்சமாக வளர்ந்து பல கல்வியாளர்களை தந்து யாழ்/கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையாக நிமிர்ந்து நிற்கின்றது. அதன் நிழலில் தஞ்சமடைந்த ஒருவனாக நானும், பிரதம விருந்தினரும் இருப்பதும் எமக்கு பெருமையளிக்கின்றது.

வறுமை மற்றும் வேறு காரணங்களால் கல்வியை தொடர முடியாத ஏழை மாணவர்களுக்கு வேட்டி, சால்வையும் மதிய போசனமும் வழங்கி ஏழை மாணவர்களின் கல்விக்கு வித்திட்டார்.

இன்றைய இலவசக் கல்வியின் தந்தையென போற்றப்படும் C.W.W கன்னங்கரா அவர்களது இலவசக் கல்வித் திட்டத்திற்கு முன்னோடியாக சகலரையும் சமமாக கற்கவைத்து, சகலருக்கும் இலவச கல்வியென்ற தத்துவத்தை செயல் மூலம் காட்டிய பெருந்தகை ஸ்தாபகர் கந்தையா உபாத்தியாயர் என்றால் அது மிகையாகாது.

இன்று புத்தி ஜீவிகளாலும் கற்றுணர்ந்த, கற்றுயர்ந்த மாணவர்களாலும் கந்தையா வாத்தியார் - வடக்கர் வாத்தியார் தமிழ் கந்தையர் என்று பற்றுடனும் பாசத்துடனும் மதிப்புடனும் குறிப்பிடப்படும் அமரர் அம்பலவாணர் கந்தையா அவர்களின் நினைவுப் பேருரையை ஆற்ற கிடைத்த வாய்ப்பை அவரின் சேவையின் மகத்துவத்தை இன்றைய தலைமுறையினருக்கு

ஆணித்தரமாக எடுத்து விளங்கவும், அவருக்கு நாம் கடமைப்பட்டவர் கள் என்பதை அழுத்திச் சொல்லவும் பொருத்தமான சந்தர்பமாக கருதி மகிழ்கின்றேன்.

ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பது அந்த நாட்டின் மனித வள அபிவிருத்தி மூலமே எட்டப்படக்கூடியது என்பதும், முறையான கல்வி செயற்பாட்டின் மூலமே ஒருவர் தன்மையும், சமுதாயத்தையும் வளம்படுத்த முடியும் என்ற கல்விச் சிந்தனையுடன் அவரால் தொடக்கி வைக்கப்பட்ட இலட்சிய வேட்கையை மேலும் முன் எடுத்தச் செல்லும் பணியில் அர்ப்பணிப்புடன் நாம் அனைவரும் ஒன்றுபடுத்தும் சந்தர்ப்பமாக இதை கருதுகின்றேன்.

## கல்வி செயற்பாடுகள் தொடர்பில் இன்றைய நிலைமை

நிறைய போட்டிகளும் தரப் படுத்தல்களும் உள்ள இன்றைய கல்வி செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர் சமுதாயத்தினர் கல்வி பொது சாதாரண பரீட்சை மற்றும் க.பொ. உயர்தர பரீட்சையிலும் சித்தியடைந்திருக்க வேண்டியது கட்டாயமானதாகும். இவையே மாணவர்களது எதிர்கால கல்விப்புலமைக்கு அத்திவாரமாக திகழ்கின்றது.

எனினும் பெரும்பாலான மாணவர் சமூகத்தினர் நெருசல் மிக்க பிரபல்யமான ஒரு சில தொழில்களையே அவர்களும் நம்பி அதனைப் பெற்றுக் கொள்ள மிகப் பிரயாசைப்பட்டு, ஈற்றிலே தோல்வியை தழுவுவதும், கேள்வி இல்லாத ஏதேனும்தொழில் துறையில் ஈடுபட்டு (கீழ் உழைப்பு - under employment) தத்தளிப்பதும் திண்டாடுவதும் அல்லது தொழில் திருப்தியற்று விரக்தியுறுவதுமாக இருப்பது வெளிப்படையான உண்மையாக தோன்றுகின்றது.

இதற்கு முறையாக திட்டமிடப்படாத பாட விதானங்களும், பெற்றோர்கள், ஆசிரியர்களது சரியான தொழில் வழிகாட்டல் மற்றும்


ஆலோசனை வழங்கும் அறிவு போதாமல் இருப்பதும் காரணங்களாகும். இத்தகைய நிலைமை தொழில்களை வழங்கும் நிறுவனங்கள் தம்மை சுற்றி மிக உயர்ந்த மதிற்சுவர்களை எழுப்பப்படுவது போன்று தோன்றுவதுடன், மனித முதலீடுகளும் விரயமாகின்றது. அதுமட்டுமன்றி, நிரம்ப கற்றிருந்தும் வேலையின்றியிருப்பினையும், புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுவதனையும் தூண்டுவதாக அமைகின்றது. அத்துடன், க.பொ.சாதாரண பரீட்சைக்கு தோன்றிய மாணவர்களில் ஏறக்குறைய அரைவாசிபேர் சித்தியடையாமல் இருப்பதும், க.பொ.உயர்தர பரீட்சையில் சித்தியடையாமலும், சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி கிடைக்காமலும் பெருந்தொகையினர் இருப்பது யாரும் அறிந்த உண்மையாகும்.

அதுமட்டுமன்றி, மிக சொற்ப எண்ணிக்கையில் பல்கலைக் கழக உயர்கல்வி வாய்ப்பை பெறுபவர்களில் பெரும்பாலோனர் கல்விசார் கற்கைகளையே (Academic studies) கற்பதனால் தொழில்சார் தகமைகளை (Profesional qualification) எதிர்பார்திருக்கும் இன்றைய தொழில் வழங்கும் சமுகத்தினரிடம் தொழில் வாய்ப்பு பெற நீண்டகாலம் காத்திருக்க வேண்டியிருப்பதும், தொழில் உள்வாங்கப்பட்டிருந்தாலும் உரிய தொழில் பயிற்சியின்றி உண்மையான செயலாற்றத்தினை பெறமுடிவதில்லை. இதனால் மாணவர்க்கு மட்டுமன்றி நாட்டுகரும் உண்மையான பலாபலன்கள் கிடைப்பதில்லை.

## தொழில் என்பது யாது?

தொழில் என்பது உண்மையில் சமூகத்தின் நிலைத்திருப்பதற்கு யாதேனுமொரு வகையில் பங்களிப்புச் செய்தலாகும்.

தொழில் என்றால் என்ன என்பதனை விளக்கும் எளிமையான ஒரு மாதிரியமைப்பு கீழே தரப்பட்டுள்ளது.




ஜீவனோபாயத்திற்கான வழிமுறைகளை அமைத்துக்கொள்வ தென்பது ஒருவரின் வாழ்க்கைப் பயணத்தைச் சீராகக் நடத்திச் செல்ல வழியமைத்துக் கொடுத்தலாகும் உண்மையில் அவ்வழியே ஒருவரின் தொழிலாகும்.

## ஒவ்வொருவருக்கும் தொழில் தேவைதானா?

வேலை ஒவ்வொருவருக்கும் தேவைதானா என்பதற்கு ஆபிரகாம் மாஸ்லோ, மனிதன் தனது தேவைகளை (பௌதீக, பாதுகாப்பு, சமூக, கௌரவ மற்றும் சுய அந்தஸ்து தேவைகள்) நிறைவு செய்யவே வேலை செய்கிறான் என்றார். ஒவ்வொருவரும் பின்வரும் மூன்று காரணங்களை முன்னிட்டே வேலை செய்கின்றனர்.

பொருளாதார காரணிகள்
- வாழ்வதற்கும்
- எதிர்கால சமூக பாதுகாப்பிற்கும்

சமூக காரணிகள்
- மேலும் அறிவினையும் பயிற்சியினையும் பெற்றுக்கொள்ள
- வேலை செய்வதன் மூலம் அனுபவத்தினை பெற்றுக் கொள்ள
- சமூகத்தில் தமக்கென ஓர் அந்தஸ்தினை பெற்றுக் கொள்ள
- சமூகத்தில் வரவேற்பினை பெற்றுக் கொள்ள

**உளரீதியான காரணிகள்**

- பிரஜை எந்த வகையில் கடமையுணர்வுடன் செயற்பட
- வேலை செய்வதன் மூலம் கிடைக்கும் திருப்திக்காக
- ஆத்ம திருப்திக்காக
- விரும்புக்காசு
- சமூகத்தில் முன்னேற்றத்தில் பங்கு எடுப்பதற்காக

முதன் முதலில் தொழிலொன்றில் ஈடுபடுமொருவர் வாழ்த்தலுக் காகவே வேலை செய்கின்றனர். எனினும் காலம் செல்ல அவர் சமூக கடமையாக கருதி வேலை செய்வதுடன் மேலும் சிறிது காலம் செல்ல தன்னுடைய வேலையினால் சமூகத்தை நாடத்திச் செல்ல ஒத்தாசை வழங்கும் பொருட்டும், அவர் பெறும் ஆத்ம திருப்திக்காகவுமே வேலை செய்கின்றனர்.

நாம் எப்படிப்பட்ட தொழிலையும் வேலையையும் செய்யும் போது அதன் மூலம் பொருளாதார வசதியும் சமூக அங்கீகாரமும் மனத்திருப்தியும் கிடைக்கின்றன.

திருப்தியளிக்காத ஒரு வேலையில் ஈடுபடவேண்டிய சந்தர்ப்பம் ஒருவருக்கு ஏற்படுமாயின் அதன்மூலம் உளரீதியான தாக்கத்துக்கு உட்படுவதோடு வெறுப்பு நிலையும் உருவாகும் சமூகத்தில் நிலவும் பொருளாதார சமூகப் பிரச்சினைகள் தோன்ற இந்நிலைமையே காரணியாகின்றது.

எனவே ஊதியம் கிடைக்கின்ற போதிலும் ஒவ்வொவரும் தமது தொழிலின் மூலம் சமுதாயக் கருமமொன்றையே நிறைவு செய்கின்றனர். இந்நிலைமையை எதிர்கொள்வதற்கு நாம் யார் என்பதை விளங்கிக் கொள்வது மட்டுமன்றி தமது தொழிலினையும் விளங்கிக் கொள்வது இன்றியமையாதது.

எந்தத் தொழிலை செய்தாலும் அதன் ஒவ்வொரு கோட் பாட்டுக்கும் ஒவ்வொருவரினதும் உடன்பாடு கிடைத்தல் வேண்டும். இன்றேல் அவருக்கு தொழிலை மனமகிழ்வுடன் ஆற்ற முடியாத நிலை ஏற்படும்.

## தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்களின் அவசியம்

இத்தகைய சேவை வெறுமனமே மாணவர்களுக்கு மட்டுமன்றி தொழிலில் ஈடுபடுபவர்கள் மற்றும் அனைத்து தரப்பின ருக்குமே செயற்பாடுகளை வினைத்திறனாகவும், விளைதிறனாகவும் சிக்கனமாகவும், (உற்பத்தித்திறன்) மேற்கொள்வதற்கு அவசிய மானதாகும்.

"பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும் விண்டு மிபோனால் முளையதாம் - கொண்டபேர் ஆற்றுடையவர்க்கும் ஆகாது அளவின்றி ஏற்ற கருமம் செயல்"

என்ற அறிஞரின் கூற்றுக்கிணங்க வயலில் முளைப்பது அரிசிதான் என்றாலும் அது உமியின் உதவியுடனே சாத்திய மாவதைப் போன்று எவ்வளவுதான் ஆற்றல் உடையவர்களாயினும் தகுதியானவர்களது சரியான முறைப்படுத்தப்பட்ட வழிப்படுத்தல்கள் மற்றும் அதற்கான வாய்ப்புக்களும் இருந்தாலே அதன் முதன்மை யான பலாபலனை பெற முடிகின்றது.

இத்தகைய சிறப்புப் பொருந்திய தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல்களின் முக்கியத்துவத்தை பின்வரு மாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

1. திட்டமிடப்படும் எந்தவொரு கல்வி முறைமைக்கும் தொழில் வழிகாட்டல் இன்றியமையாதது.
2. ஒரு தொழிலினைப் பெற்றுக்கொள்வதற்கு எழும் பிரச்சினைகளை தாமாகவே விடுவித்துக்கொள்ளும் ஆற்றலினை ஏற்படுத்துகின்றது.
3. தொழிவழிகாட்டலானது நன்மைகள் பெறுபவர்க்கு மட்டுமன்றி அவருடாக அவரது குடும்பத்தினர்க்கும் ஏன் முழு சமுதாயத்திற்குமே நன்மை பயக்கின்றது.
4. "உசிதமான உழைப்பு இல்லாவிடின் நாட்டுக்கேற்ற

உழைப்பு" என்ற மனோதிடம் ஏற்பட வழிசமைக்கும்.

5. தொழில் மற்றும் தொழில் பெறும் சூழலின் உண்மையான நிலையைப் பற்றிய அறிவை வெளிப்படுத்தல்.

6. ஒவ்வொருவரதும் ஆற்றல்கள், விருப்புக்கள், ஆளுமைப் பண்புகள், உணர்வுகள் ஆகியவற்றினை வெளிப்படுததக் கூடிய தொழிலினை தெரிவு செய்ய உதவுதல்.

## சரியான வழிகாட்டலும் ஆலோசனையும் கிடைக்காமல் பொருத்தமில்லாத தொழிலில் பிரவேசிப்பதனால்....

1) பொருளாதார ரீதியாக தமக்கு நட்டம் ஏற்படுவது இழப்பாகும்
2) தமது திறமைக்குப் பொருந்தாதவற்றினைச் செய்வதனால், தனக்கும் பொதுவாக சமுகத்திற்கும் நன்மைகள் கிடைக்காமல் போகும்.
3) பயிற்சியை பெற்ற தொழிலினைக் கைவிட்டு வேறொரு தொழிலுக்குச் செல்வதனால் ஏற்படும் இழப்பு பொதுவாக சமுகத்தினையும், நாட்டினையும் பாதிக்கும் விடயமாகும்.
4) தனக்கு பொருத்தமில்லாத தொழில் அல்லது தன்னால் தாங்கிக் கொள்ள முடியாத தொழிலில் ஈடுபடுவது என்பது தனது நரம்புத் தொகுதியில் ஏற்படும் பாதிப்பு கடுமையாக இருக்கும்.
5) ஒருவரின் உயர்ந்த அறிவாற்றலினால் உரிய பயன்பெறப்படாமையால் மனித சமூகத்திற்கு கிடைக்கவேண்டிய பல நன்மைகள் இல்லாமல் போகும்.

எனவே, தொழில்களைத் தேடும் பலர் தன்னைப் பற்றிய சரியான மதிப்பீட்டினைச் செய்து கொள்ளத் தெரியாதவர்களாக இருப்பதனால்,

1. தனது தகுதியை விட உயரிய தொழிலையே எதிர்பார்க்கின்றனர்.
2. தன்னிடமில்லாத தகுதிகளையும், திறமைகளையும் வேண்டி நிற்கும் வேலைகளில் சேர முற்படுகின்றனர். குறிப்பாக உயர் தொழில் தகுதியை வேண்டிய "ஆடை நழுங்காத

தொழில்" (White colar job) என்பதை எதிர்பார்த்து நீண்ட காலம் காத்துக்கிடக்கின்றனர்.

3. தனக்கு விருப்பமில்லாத ஒரு தொழிலில் சேர்ந்து பின்னர் கூடுதலான சம்பளத்தை எதிர்பார்த்து வேதனைப்பட்டு, விரக்தியுறுகின்றனர்.
4. கடும்போட்டி நிலவும் ஒரு சில தொழில்துறைகளில் மாத்திரம் பிரவேசிக்க முயற்சிக்கின்றனர்.

## வெற்றிகரமான தொழிலொன்றினைத் தேடலுக்கான உபாயங்கள்

வெற்றிகரமான தொழில் ஒன்றினைத் தேட விளையும் நீங்கள், நன்கு விருத்தி செய்யப்பட்ட தொழில் தேடும் திறன்களைக் கொண்டிருப்பதுடன் அவை பற்றிய போதியளவு தகவல்களையும் பெற்றிருத்தல் வேண்டும். வெற்றிகரமான தொழில் தேடல் என்பது பின்வரும் மூன்று காரணிகளில் தங்கியுள்ளது.

1. தத்தம் இலக்குகள், மற்றும் திறன்கள் பற்றிய விழிப்புணர்வு.
2. தொழில் சந்தை பற்றிய தெளிவுத் தன்மை
3. நன்கு திட்டமிடப்பட்ட தொழில் தேடல் முயற்சி

## தொழில் தேடல் முயற்சியில் முக்கிய கட்டங்கள்

### ✧ தன்னைப் பற்றிய சுய மதிப்பீடு

தொழில் தேட ஆரம்பிக்கும்போது உங்களுடைய ஆர்வங்கள், திறன்கள், சாதனைகள், அனுபவங்கள், இலக்குகள், பலவீனங்கள் என்பவை பற்றிய தெளிவினைக் கொண்டிருத்தல் வேண்டும். உங்களுக்குப் பொருத்தமான தொழில் பற்றியும், தொழில் வழங்குனருக்கு உங்களால் வழங்கக் கூடிய சேவைகள் பற்றியும் தெளிவில்லாவிடில், உங்களால் எப்படியொரு தொழிலைத் தேட முடியும்? எனவே உங்களைப் பற்றிய சுயமதிப்பீடானது சிறப்பான தொழிலொன்றினை மேற்கொள்வதற்கும், உங்கள் திறமைகளை சரியான முறையில் சந்தைப்படுத்துவதற்கும் உதவுகின்றது.

### ✦ தொழில் தெரிவு பற்றிய ஆய்வு

தொழில் தேடலின் அடுத்த படியாக மேலே இனங் காணப்பட்ட உங்கள் திறமைகளுக்கும், தொழில் வழங்குனர்களின் எதிர்பார்ப்புகளுக்கும் இடையேயான பொருத்தப்பாட்டினை ஆய்தல் வேண்டும். பல்வேறு வகைப்பட்ட தொழில்களையும், தொழில் தரு நிறுவனங்களையும் பற்றி அந் நிறுவனங்களின் வெளியீடுகள், அறிக்கைகள், தொழில் புரிபவர்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். அத்துடன் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை நிலையங்கள் ஊடாகவும் இணையத் தளங்கள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

### ✦ தொழிலையும் தொழில் வழங்குனரையும் தெரிவு செய்தல்

தொழில் தெரிவு பற்றிய ஆய்வினை மேற்கொள்ளும் போது, உங்கள் அனைத்துத் திறன்கள், தகைமைகளைப் பயன்படுத்தக் கூடியதான தொழிலினைத் தெரிவு செய்ய முடியாதிருக்கலாம். இச் சந்தர்ப்பத்தில் கூடியளவு திருப்தியளிக்கக் கூடியதொரு தொழிலினையும், தொழில் தருநரையும் தெரிவு செய்யலாம்.

### ✦ தொழில் தேடல் ஆவணங்களைத் தயாரித்தலும் தொழில் தேடல் திறன்களை வளர்த்தலும்

அடுத்த கட்டமாக உங்கள் தொழில் இலக்கு தொடர்பாக நீங்கள் கொண்டிருக்கும் அனைத்துத் தகைமைகள், திறன்கள், அனுபவங்கள் என்பவற்றைத் தொழில் வழங்குநருக்கு பிரதிபலிக்கக் கூடியவாறு சுயவிபரக் கோவையையும், விண்ணப்பக் கடிதத்தையும் தயாரித்தல் வேண்டும். அத்துடன் சிறந்த தொழில் வெற்றிடங்களைத் தேடல், நேர்முகப் பரீட்சைகளை எதிர்கொள்ளல், உங்களை சிறப்பாக முன்னிலைப்படுத்தல், உங்களின் எதிர்ப்புகளை வெளிப் படுத்துதல் (சம்பளம் போன்றவற்றை) உபாயங்களையும் கற்றுக் கொள்ளல் வேண்டும்.

## ✦ தொழில் தேடல் நடவடிக்கைகளைத் திட்டமிடலும் அமுல்படுத்தலும்

உங்களின் அடுத்த கட்டமாக உங்களின் நேரத்தின் ஒரு பகுதியினை தொழில் தேடலுக்கென ஒதுக்கிக் கொள்ளல் வேண்டும். இதற்கென அதிக நேரத்தை செலவிடுவது கூடியளவு தொழில் வாய்ப்புக்கள் பெற்றுக் கொள்வதைச் சாத்தியமாக்குகின்றது.

### *அ) தொழில் வெற்றிட அறிவித்தல்களைக் கையாளுதலும், வலைப் பின்னல் தொடர்புகளை விருத்தி செய்தலும்.*

தொழில் வெற்றிட விளம்பரங்களினூடாக அறிந்து விண்ணப்பித்தல் ஓர் பொதுவான தொழில் தேடல் முயற்சியாகும். எனினும், ஆய்வுகளின்படி 80% மான தொழில் வெற்றிடங்கள் தொழில் வழங்குநர்களால் விளம்பரப்படுத்தப்படுவதில்லை. எனவே தொழில் தேடுநர்களாகிய நீங்கள் விளம்பரங்களிற்கு விண்ணப்பிப்ப துடன், தொழில் வழங்குனர்களுடனான உங்கள் வலைப்பின்னல் தொடர்புகளை விரிவுபடுத்துவதன் மூலம் மறைந்து காணப்படுகின்ற தொழில் சந்தைகளை இனங்கண்டு கொள்ளலாம்.

குறித்ததொரு தொழில் ஸ்தானத்தை இலக்கு வைத்துள்ள, நீங்கள் அத்துறைசார் நிறுவனங்களுடனும் நிபுணர்களுடனும் தொடர்புகளை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும். இது உங்களுக்கு அத்துறை சார் யதார்த்த நிலைமைகளை விளக்கிக் கொள்ள உதவும்.

### *ஆ) தொழில் வழங்குநர்களுடன் நேரடித் தொடர்பு கொள்ளல்*

உங்களின் விண்ணப்பக் கடிதத்தையும், சுயவிபரக் கோவையும் குறித்த நிறுவனத்தின் மனிதவள பிரிவுக்கோ அல்லது குறித்த முகாமையாளருக்கோ அனுப்பி வைத்தல் நன்று. இது அரிதாகக் காணப்படுகின்ற வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ள உதவும். அத்துடன் தொழில் வழங்குனர்களுடன் தொலைபேசியில்

தொடர்பு கொள்ளல், அவர்களை நேரடியாகச் சந்திப்பதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கும். சந்திப்பின்போது அந் நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகள், வாராந்த சஞ்சிகைகள், பத்திரிகைகள் மூலம் நிறுவனத்தைப் பற்றி அறிந்து வைத்துள்ளவை பற்றி விவாதிக் கலாம். இது அவர்களுக்கு உங்களின் மீதான நம்பகத் தன்மையை வலுப்படுத்தும்.

*இ) பின் தொடரலும் ஆவணங்களைப் பேணுதலும்*

நீங்கள் தொழில் தேடல் தொடர்பாக மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளினதும் பதிவுகளைப் பேணுதல் தொழில் தேடல் உத்திகளை எதிர்காலத்தில் மேம்படுத்துவதற்கு உதவும்.

*ஈ) விடாமுயற்சி*

பொருத்தமான தொழிலொன்று கிடைக்கும்வரை தொழில் தேடலானது உறுதியுடனும் புதிய உத்வேகத்துடனும் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

**✦ தொழிலைப் பெற்றுக் கொள்ளல்**

மேற்கூறிய படிமுறைகளைச் சரியான முறையில் நடை முறைப்படுத்துவதன் மூலம் நீங்கள் வெற்றிகரமானதொரு தொழிலைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியின் முக்கியத்துவம்

"திறமையினை விஞ்சக்கூடிய ஆற்றல் நிலையான மற்றும் முறையான பயிற்சிக்குண்டு"

பெற்ற தொழில் கல்வியினை அபிவிருத்தி நிலைக்கு இட்டுச் செல்வது சரியாகவும் முறையாகவும் திட்டமிடப்பட்ட பயிற்சியளித்தலே ஆகும். உண்மையான பயிற்சியளித்தல் ஆளணியானது அறிவு, திறன்கள்

மற்றும் நல்ல மனப்பாங்கினை (*Knowledge skills & Attitude*) விருத்தியாக்கி ஆளுமை (*Pesonality*) ஊடான உற்பத்தி திறன் மேம்பாட்டினை ஏற்படுத்துகின்றது. இதனா லேயே ஒருவரது வெற்றி அல்லது நிறுவனங்களது பயனுறுதியான இலக்கு அடைவு அல்லது நாடு ஒன்றினது அபிவிருத்தி என்பது அவைக்கு கிடைக்கக்கூடிய வளங்களிலன்றி அவற்றை உத்தம மட்டத்தில் அதாவது உற்பத்தித் திறனான பயன்பாட்டிலேயே (வினைத்திறன், சிக்கனம் மற்றும் விளைதிறன் - *Efficiency, Economy & Effectiveness*) தங்கியுள்ளது எனப்படுகின்றது.

குறிப்பாக புதிய கைத்தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளான யப்பான், கொரியா, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, சீனா போன்ற நாடுகள் வெறுமனே இரண்டு மூன்று தசாப்த காலங்களில் மனிதவள அபிவிருத்தி மற்றும் தொழில் நுட்பங்களின் மேம்பாட்டில் அபிவிருத்தியை எட்டியுள்ளன. இதனால் அபிவிருத்தியடைந்துவரும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் மட்டுமன்றி அபிவிருத்திய டைந்த அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா போன்ற நாடுகளும் இத்தகைய தொழில்நுட்பங்கள் மற்றும் உத்திகளை கைக்கொள்ள விளைகின்றன.

எனவே, இத்தகைய நிலைமைகளை அடைவதற்குரிய உடனடித்தீர்வாக தொழில்நுட்பத்துடன் கூடிய தொழில் சார் கற்கைகளே (*Professional studies*) அமைகின்றன. இவை மிக குறுகிய காலத்தில், மிகக் குறைவான உள்ளீட்டு வளங்களைக் கொண்டு உடனடியாகவே தொழிலில் ஈடுபடுத்த கூடிய தன்மையினை வழங்குவதாலாகும்.

## தொழில் பயிற்சியினை வழங்கும் அமைப்புக்கள்

முக்கியமான பொதுத்துறை பயிற்சியளித்தல் முகவர்களாக பின்வரும் அமைப்புக்கள் காணப்படுகின்றன.

01. தொழில்நுட்பக் கல்வி பயிற்சி திணைக்களம் (DTET)

02. இலங்கை தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் (NITESL)
03. இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் (SLIATE)
04. தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை (NAITA)
05. தொழில் பயிற்சி அதிகார சபை (VTA)
06. தேசிய இளைஞர் சேவை மன்றம் (NYSC)
07. தேசிய வணிக முகாமைத்துவ நிறுவனம் (NIBM)
08. தாதிமார் பயிற்சி கல்லூரி (Nursing School)
09. இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிலையம் (CGTTI)
10. ஆடை கைத்தொழில் பயிற்சி நிறுவனம் (CITI)
11. இரத்தினக்கல் மற்றும் ஆபரணம் ஆராட்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (GJRTI)
12. விவசாய திணைக்களம் (Agriculture Dept.)
13. கட்டிட நிர்மாண மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ICTAD)
14. உல்லாச பிரயாண மற்றும் ஹோட்டல் முகாமைத்துவத்தில் சிறிமாவோ பட்டாரநாயக்க நிறுவனம் (SBITHM)
15. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை (SLEDB)
16. இலங்கை அச்சக நிறுவனம் (SLIOP)
17. இலங்கை தேசிய வடிவமைப்பு நிலையம் (SLNDC)
18. அச்சக மற்றும் வரைகலை இங்றின் (Ingrin) நிறுவனம்
19. இலங்கை துறைமுக அதிகார சபை (SLPA)
20. சுகாதார அமைச்சு (Ministry of Health)
21. இலங்கை தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் (SLTTI)

குறிப்பாக யாழ்.குடா நாட்டில் தொழில் பயிற்சியினை வழங்கும் முக்கியமான அமைப்புக்கள் வருமாறு.

1. யாழ்ப்பாண தொழில்நுட்பவியல் கல்லூரி.
2. இலங்கை தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவகம்.
3. யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம்.
4. தகவல் தொழில்நுட்ப பூங்கா (IT Park)
5. தேசிய இளைஞர் சேவை மன்றம் (NYSC)
6. யாழ்ப்பாண பிராந்திய திறந்த பல்கலைக்கழகம்.

7. தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை
8. தொழில் பயிற்சி அதிகாரசபை
9. பிரதேச செயலக கற்கை நெறிகள்
10. வட்டுகோட்டை தொழில்நுட்ப நிறுவனம்.
11. அரச சார்பற்ற நிறுவனங்கள் (WUSE, World Vision Etc.)
12. ஏனைய தனியார் துறை அமைப்புகள்

**1. யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரியின் கற்கை நெறிகள்**

**1. தொழிற் துறைசார் கற்கை நெறிகள்**

| குறியீட்டு இல | கற்கை நெறி | தகமை | வயது | காலமும் வகையும் |
|---|---|---|---|---|
| ECC 08 | எந்திரவியலாளர் கைப்பணியாளர் பயிற்சி தேசிய சான்றிதழ் இலத்திரனியல் Electronic | க.பொ.த (சா/த) இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம் போதனா மொழி உட்பட 6 பாடங்கள் | 17-25 | முழுநேரம் இரு வருடங்கள் |
| ECC10 | எந்திரவியலாளர் கைப்பணியாளர் பயிற்சி தேசிய சான்றிதழ் பொருத்து பொறியியற் கல்வியாளர் F.M | க.பொ.த (சா/த) இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம் போதனா மொழி உட்பட 6 பாடங்கள் | 17-25 | முழுநேரம் இரு வருடங்கள் |
| ECC13 | எந்திரவியலாளர் கைப்பணியாளர் பயிற்சி தேசிய சான்றிதழ் கைத்தொழில்துறை மின்னியலாளர். IEW | க.பொ.த (சா/த) இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம் போதனா மொழி உட்பட 6 பாடங்கள் VTA | 17-25 | முழுநேரம் இரு வருடங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| ECC18 | எந்திரவியலாளர் கைப்பணியாளர் பயிற்சி தேசிய சான்றிதழ் மோட்டார் வாகனம் திருத்தினர் AM | க.பொ.த (சா/த) இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம் போதனா மொழி உட்பட 6 பாடங்கள | 17-25 | முழுநேரம் இரு வருடங்கள் |
| ECC 02 | எந்திரவியலாளர் கைப்பணியாளர் பயிற்சி தேசிய சான்றிதழ் வில் பற்றாசு பிடிப்பவர் Welding | ஆண்டு - 10 VTA | 17-25 | முழுநேரம் ஒரு வருடம் |
| ECC09 | எந்திரவியலாளர் கைப்பணியாளர் பயிற்சி தேசிய சான்றிதழ் நீர் குழாய் பொருத்துனர் Plumbing | ஆண்டு - 10 VTA | 17-25 | முழுநேரம் ஒரு வருடம் |
| ECC 06 | எந்திரவியலாளர் கைப்பணியாளர் பயிற்சி தேசிய சான்றிதழ் மரப் பொறியியலாளர் Woodmachinist | ஆண்டு - 10 VTA | 17-25 | முழுநேரம் ஒரு வருடம் |
| ECC 14 | எந்திரவியலாளர் கைப்பணியாளர் பயிற்சி தேசிய சான்றிதழ் கட்டட கைப்பணியாளர் BCT | ஆண்டு - 10 VTA | 17-25 | முழுநேரம் ஒரு வருடம் |

| | | | | |
|---|---|---|---|---|
| ECC 26 | எந்திரவியலாளர் கைப்பணியாளர் பயிற்சி தேசிய சான்றிதழ் மோட்டார் சைக்கிள் திருத்துனர் MRS | ஆண்டு 9 | 17-25 | முழு நேரம் 6 மாதங்கள் |
| ECC 33.1 | எந்திரவியலாளர் கைப்பணியாளர் பயிற்சி தேசிய சான்றிதழ் டக்டர் திருத்துனர் TRM | ஆண்டு 9 | 17+ | பகுதி நேரம் ஒரு வருடம் |
| ECC 19 | எந்திரவியலாளர் கைப்பணியாளர் பயிற்சி தேசிய சான்றிதழ் கட்டட தொழில் நுட்ப நிர்மானவியல் BCT | க.பொ.த (சா/த) இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம் போதனா மொழி உட்பட 6 பாடங்கள் | 17-25 | முழு நேரம் ஒரு வருடம் |

## 2. வர்த்தகத் துறைசார் கற்கை நெறிகள்

| குறியீட்டு இல | கற்கை நெறி | தகமை | வயது | காலமும் வகையும் |
|---|---|---|---|---|
| BSC-04 | கணக்கீட்டு தொழில் நுட்ப வியலாளருக்கான தேசிய சான்றிதழ் NCAT-DAY | க.பொ.த (சா/த) ஒரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம் போதனா மொழி உட்பட 6 பாடங்கள் | 17-25 | முழுநேரம் இரு வருடங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| BSC -04.1 | கணக்கீட்டு தொழில் நுட்ப வியலாளருக்கான தேசிய சான்றிதழ் NCAT-P/T | க.பொ.த (சா/த) இரு தடவைக்கு மேற்படாத அமர்வு களில் கணிதம் போதனா மொழி உட்பட 6 பாடங்கள் | 17+ | பகுதி நேரம் இரு வருடங்கள் |
| BSC-14 | தட்டச்சு மற்றும் கணனியில் தேசிய சான்றிதழ் NCST- DAY | க.பொ.த (சா/த) இரு தடவைக்கு மேற்படாத அமர்வு களில் போதனா மொழி திறமைச் சித்தி கணிதம் உட் பட 6 பாடங்கள் | 17-25 | முழு நேரம் ஒரு வருடங்கள் |
| BSC -14.1 | தட்டச்சு மற்றும் கணனியில் தேசிய சான்றிதழ் NCST- P/T | க.பொ.த (சா/த) ஒரு தடவைக்கு மேற்படாத அமர்வு களில் போதனா மொழி திறமைச் சித்தி கணிதம் உட் பட 6 பாடங்கள் | 17+ | பகுதி நேரம் ஒரு வருடங்கள் |
| BSC -05 | சந்தைப்படுத்த லில் தேசிய சான்றிதழ் NCM-DAY (ஊடகமொழி ஆங்கிலம்) | க.பொ.த (சா/த) ஒரு தடவைக்கு மேற்படாத கணிதம் போதனா மொழி ஆங்கிலம் உட்பட 6 பாடங்கள் | 17-25 | முழுநேரம் ஒரு வருடங்கள் |
| ESC 01 | வர்த்தகம் கைத்தொழில் மற்றும் ஆங்கில கல்வியில் தேசிய சான்றிதழ் NCE-DAY | க.பொ.த (சா/த) இரு தடவைக்கு மேற்படாத அமர்வு களில் ஆங்கிலம் உட்பட 6 பாடங்கள் | 17-25 | முழுநேரம் ஒரு வருடங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| ESC 01.1 | வர்த்தகம் கைத்தொழில் மற்றும் ஆங்கில கல்வியில் தேசிய சான்றிதழ் NCE-P/T | க.பொ.த (சா/த) இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கிலம் உட்பட 6 பாடங்கள் | 17+ | பகுதி நேரம் இரு வருடங்கள் |

### 3. பொறியியற் துறைசார் கற்கை நெறிகள்

| குறியீட்டு இல | கற்கை நெறி | தகமை | வயது | காலமும் வகையும் |
|---|---|---|---|---|
| ETC 01.1 | எந்திரவியலாளருக்கான சான்றிதழ்- குடிசார் எந்திரவியல் (Civil) | க.பொ.த (சா/த) இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம் விஞ்ஞானம் போதனா மொழி உட்பட 6 பாடங்கள் | 17- | பகுதி நேரம் மூன்று வருடங்கள் |
| ETC-02.1 | எந்திரவியலாளருக்கான தேசிய சான்றிதழ்- மின் மற்றும் இலத்திரனியல் (EE) | க.பொ.த (சா/த) இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம் விஞ்ஞானம் போதனா மொழி உட்பட 6 பாடங்கள் | 17- | பகுதி நேரம் மூன்று வருடங்கள் |
| ETC 03.1 | எந்திரவியலாளருக்கான சான்றிதழ்- பொறிமுறை எந்திரவியல் (ME) | க.பொ.த (சா/த) இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம் விஞ்ஞானம் போதனா மொழி உட்பட 6 பாடங்கள் | 17- | பகுதி நேரம் மூன்று வருடங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| ETC-04.1 | எந்திரவிய லாளருக்கான தேசிய சான்றிதழ்- கணிய அளவை யியல் (QS) | க.பொ.த (சா/த) இரு தடவைக்கு மேற்படாத அமர்வு களில் கணிதம் விஞ்ஞானம் போதனா மொழி உட்பட 6 பாடங்கள் | 17- | பகுதி நேரம் மூன்று வருடங்கள் |
| ETC 04 | தேசிய சான்றிதழ் கணிய அளவையியல் (QS) (ஊடக மொழி ஆங்கிலம்) | க.பொ.த (சா/த) இரு தடவைக்கு மேற்படாத அமர்வு களில் கணிதம் விஞ்ஞானம் போதனா மொழி திறமைச் சித்தி மற்றும் ஆங்கிலம் உட்பட 6 பாடங்கள் | 17- | முழு நேரம் ஒரு வருடங்கள் |
| ETC-05 | தேசிய சான் றிதழ்-பட வரைஞர் (DA) | க.பொ.த (சா/த) இரு தடவைக்கு மேற்படாத அமர்வு களில் கணிதம், விஞ்ஞானம் போதனா மொழி உட்பட 6 பாடங்கள் | 17-25 | முழு நேரம் ஒரு வருடங்கள் |

**2. யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் கற்கை நெறிகள்**

| பயிற்சி நெறிகள் | நேரம் | காலம் | குறியீடு |
|---|---|---|---|
| i. உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா | பகல்/ மாலை | 4 வருடங்கள் | HNDA |
| ii. உயர்தேசிய முகாமைத்துவ டிப்ளோமா | பகல் | 3 வருடங்கள் | HNDM |

| | | | |
|---|---|---|---|
| iii. உயர்தேசிய ஆங்கிலத்தில் டிப்ளோமா | பகல்/ மாலை | 2 வருடங்கள் | HNDE |
| iv. உயர்தேசிய வியாபாரக் கல்வி டிப்ளோமா | பகல் | தொழிற்பயிற்சி உடன் 3 வருடங்கள் | HNDBS |
| v. உயர்தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா | பகல் | தொழிற்பயிற்சி உடன் $2\frac{1}{2}$ வருடங்கள் | HNDIT |

### 3. இலங்கை தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் கற்கைகள்

இது யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரியுடன் இணைந்து பின்வரும் கற்கை நெறிகளை தற்போது ஆரம்பித்துள்ளது.

i. தொழிநுட்ப ஆசிரியர் பயிற்சிக்கான தேசிய சான்றிதழ்

ii. ஆங்கிலத்தில் தேசிய சான்றிதழ்

iii. ஆங்கிலத்தில் தேசிய டிப்ளோமா

iv. சிங்களத்தில் தேசிய சான்றிதழ்

## யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரியின் புதிய பரிமானம்

யாழ்.மாவட்டம் மட்டுமல்லாது வன்னி மாவட்ட மாணவர்களுக்கும் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வழங்கும் முன்னணி அமைப்பாக திகழ்வது தான் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி. 1959ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ம் திகதி நியூசிலாந்து அரசின் உதவியுடன் உருவாக்கப்பட்டு, பல ஆயிரக் கணக்கான தொழில்நுட்ப மாணவர்

களை உலக மயமாக்கலுக்காக பிரசவித்திருக்கும் இந்நிலையில், தனது 50 ஆண்டு நிறைவில் பொன் விழாவினையும் விரைவில் கொண்டாட இருக்கிறது. சர்வதேச தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப தனது வளர்ச்சிப் போக்கை மாற்றி நவீன தொழிநுட்ப வளர்ச்சியினை எதிர்கொள்ளக் கூடிய, தென்னாசியாவில் ஒரு தொழில்நுட்ப பல்கலைக்கழகமாக நிற்கப்போவது எதிர்கால தொழில் நுட்ப மாணவர்களுக்கு வரப்பிரசாதமாகவும், யாழ் மண்ணிற்கு பெருமை சேர்க்கும் விடயமும் ஆகும்.

யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரி தொழில்நுட்பவியல் கல்லூரியாக (College of Technology) தரமுயத்தப்பட்டுள்ள நிலையில், தொழல்நுட்ப பல்கலைக்கழகமாக மிக விரைவில் தர முயர்த்துவதற்குமான சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டு, இதற்குரிய முன்னெடுப்புகளும் அனுமதியும் வாழ்க்கைத் தொழில்பயிற்சி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக கொரிய நாட்டின் நிதியுதவியுடன் கட்டிடங்கள் பூர்த்தியாக்கப்பட்டு அதில் பொருத்துவதற்கு அதி நவீன இயந்திரங்கள் 12 கொள்கலன்களில் நேரடியாக கொரிய அரசாங்கத்தினால் அனுப்பப்பட்டுள்ளன. இந்த வேலை திட்டத்திற் காக கொரிய அரச 23 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியுதவி யாக தந்ததுடன் நிபுணத்துவ உதவிகளையும் தொழில் நுட்ப விரிவுரையாளர் குழாமை தென்கொரியாக்கு அழைத்து பயிற்சியளித் தும் வருகின்றது. மேலும் இதற்கான மேலதிக நிதி ஜனாதிபதி நிதியிலிருந்து வழங்கப்பட்டிருப்பதும், அதி நவீன இயந்திரம் கொண்ட கொல்கலன்களை கொழும்பிலிருந்து தருவித்து, பாதுகாப்பளிப்பதும் அரச படைகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த கல்லூரியின் தரமுயர்வும் புதிதாக அறிமுகப்படுத்தப் படவுள்ள தொழில் துறை பயிற்சிகளும் குடா நாட்டு கல்வி புலத்தில் குறிப்பாக தொழில்நுட்பவியல் கல்வி துறையில் ஒரு பாரிய வரப்பிரசாதமாக மாணவ சமுதாயத்திற்கு அமையவுள்ளது எம்மையெல்லாம் சந்தோசத்தில் ஆழ்த்தியுள்ளது. தரமுயரும் இந்நிறுவனத்தில் புதிய துறைகளாக

1. *Automotive Technology* (தன்னியக்க தொழில்நுட்பவியல்)
2. *Construction Technology* (நிருமான தொழில்நுட்பவியல்)
3. *Electronic & Tele communication Technology*
   (இலத்திரனியல் தொலைத்தொடர்பு தொழில்நுட்பவியல்)
4. *Information & Communication Technology*
   (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல்)
5. *Manegement & Accountary Technology*
   (முகாமைத்துவ மற்றும் கணக்கியல் தொழில்நுட்பவியல்)
6. *Electrical Technology* (மின்னியக்க தொழில்நுட்பவியல்)

## தேசிய வாழ்க்கை தொழில்தகமை முறைமை

தொழில்நுட்ப மாணவர்களுக்கு நீண்டகாலமாக நிலவி வந்த தேசிய சர்வதேச அங்கீகரிக்கப்படாத சான்றிதழ்கள், திப்புளோமாக்களை தற்போது "தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமை முறைமை" (National Vocational Qualification System) [NVQ] என்பதனை அறிமுகப்படுத்தி, அதனூடாக முழுமை யான தேசிய சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுத் தருகின்றது. மூன்றாம் நிலை, வாழ்க்கை தொழிற்கல்வி, ஆணைக்குழுவானது, அரச துறை சார்ந்த தொழில்நுட்பக் கல்வி மற்றும் வாழ்க்கைத்

தொழில் பயிற்சி நிறுவகம், திறன்கள் அபிவிருத்தித் திட்டத்துடன் இணைந்து வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில் நுட்பப் பயிற்சி கல்வி அமைச்சின் வழிகாட்டலுக்கு இணங்க NVQ முறைமையை 7 மட்டங்களாக அறிமுகப்படுத்தியுள்ளது.

மட்டம் 1 - அடிப்படை ஆரம்ப ஆற்றல்களுள்ள கைப்பணியாளர்கள்

மட்டம் 2 - அடிக்கடி மேற்பார்வையின் கீழ் செயலாற்றும் கைப்பணியாளர்கள்.


மட்டம் 3 - சிறிய மட்டத்தியான மேற்பார்வையின் கீழ் செயலாற்றும் கைப்பணியாளர்கள்.


மட்டம் 4 - சுயாதீனமாக செயலாற்றும் கைப்பணியாளர்கள்.

மட்டம் 5 - மேற்பார்வையாளர்கள்

மட்டம் 6 - முகாமையாளர்கள்

மட்டம் 7 - திட்டமிடுபவர்கள்






இவற்றில் 1-4 வரையான மட்டங்கள் சான்றிதழ்களாகவும், 5-6 வரையான மட்டங்கள் திப்புளோமாகவும், 7வது மட்டம் பட்டச் சான்றிதழாகவும் வழங்கப்படுகின்றன.

இதனால் கல்வியில் எந்த நிலையில் உள்ள மாணவர்களும் அங்கீகரிக்கப்பட்ட பாடவிதானங்களை வகுத்து நடாத்தும் DTET, VTA, NAITA, NITESL, NYSC போன்ற நிறுவனங்களில் தமது தகுதிக்கேற்ப மட்டங்களைத் தெரிவு செய்து பயின்று, இறுதியாக வாழ்க்கைத் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தில் (Vocational Technology university) பட்டச் சான்றிதழ் பெற முடியும். இதனால் தேசிய சர்வதேச அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களை NVQ வழங்கி, உள்நாட்டில், மட்டுமன்றி வெளிநாட்டிலும் வேலை வாய்ப்பை பெறக்கூடிய சந்தர்ப்பத்தினை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றது.

தென்கொரிய நாட்டு நிதியுதவிக்கு மேலதிகமாக தாய்லாந்து, யப்பான், சீனா, ஜேர்மனி நாடுகளின் உதவிகளும் கிடைப்பதற்கான முன்னெடுப்புகளும், ஒப்பந்தங்களும் தற்போது இடம்பெற்று

வருகின்றன. அதில் பின்வரும் தொழில்நுட்பவியல்கள் இடம்பெற வுள்ளது.

1. வில் பற்றாசு தொழில்நுட்பவியல்
   (*Welding Technology*)
2. குளிர்சாதனப்பெட்டி மற்றும் குளிரேற்றி தொழில்நுட்பவியல்
   (*Refrigeration & Air conditioning Technology*)
3. உணவு பதனிடும் தொழில்நுட்பவியல்
   (*Food preservation Technology*)
4. பண்ணை இயந்திர தொழில்நுட்பவியல்
   (*Farm Mechinary Technology*)
5. உற்பத்தி தொழில்நுட்பவியல்
   (*Production Technology*)
6. ஆபரண வடிவமைப்பு மற்றில் உற்பத்தியாக்க தொழில்நுட்பவியல்
   (*Jewellery Design & Manufacturing Technology*)
7. எண்மான உருவாக்கல் மற்றும் அச்சிடல் தொழில்நுட்பவியல்
   (*Digital Imaging & printing Technology*)
6. உயிரியல் மருத்துவ தொழில்நுட்பவியல்
   (*Bio Medical Technology*)

இத்தகையதொரு வாய்ப்பை குடாநாட்டு மாணவர்களுக்கு ஏற்படுத்தி தருவதற்கு முழு மூச்சில் முன்னின்று செயற்படும் எமது மதிப்பிற்கும் கௌரவத்திற்குமுரிய நிறைவேற்று பணிப்பாளரும் மாகாண பணிப்பாளருமான கலாநிதி ந.யோகராஜன் (சமாதான நீதவான்) அவர்களையே சாரும்.

*What is Education & Higher Education?*

*Education is meant, among other thing is to help to acquire the finer qualities of*
*CIVILISED LIVING*

*Higher Education in University meant to give a comprehensive education grounded on high moral qualities that would make one an ideal citizen, IMBUED with the best of tradifions of life.*

*"Not as it were to fill an empty vessel, But to turn the eye of the soul towards the light*
*-The Greek philosopher*
*PLATO*

*"Educate Man and you Educate on person Educate woman and you Educate a Whole Family*
*-Mahatma Gandhi*

பொது நூலகம்
வலி. தெற்கு சுன்னாகம்

| | |
|---|---|
| வரவுப் பதிவு எண் | |
| வகுப்பு எண் | |

# இன்றைய சமுதாய அபிவிருத்தியில் தொழில்நுட்பக் கல்வியும் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல்களினதும் முக்கியத்துவம்



தயா அச்சகம் 138 நாவலர் வீதி யாழ்ப்பாணம்